# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2083 - 2018 අගෝස්තු මස 03 වැනි සිකුරාදා - 2018.08.03

*2083 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1066 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தம்) சட்டமூலம் 2018, யூலை மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.



1065- B81437 - 5,403 (2018/07)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண அரச சேவையின் நெசவுக் கைத்தொழில் ஆலோசகர் (III ஆம் தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

*வடமேல் மாகாண அரச சேவையின் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் நெசவுக் கைத்தொழில் ஆலோசகர் (III ஆம் தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இந்த அறவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட வடமேல் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட, ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*இந்தப் பரீட்சை வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவினால் 2018, செத்தெம்பர் மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற்போடுவதற்கும், இரத்துச் செய்வதற்கும் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.*

**1. சம்பள அளவுத் திட்டம் :**

*2016.02.25 ஆந் திகதியுடைய 03/2016 இலக்கம் கொண்ட அரச நிர்வாக சுற்று நிரூபத்தின் உப பட்டியல் I இன் அடிப்படையில் இந்த பதவிகளுக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் MN - 1- 2016 இன் படி ரூ. 27,140 - 300 x 10 - 350 x 11 - 495 x 10 - 660 x 10 - ரூ. 45, 540 ஆகும்.*
*2020.01.01 ஆந் திகதி வரை சம்பளம் வழங்கப்படுவது அந்த சுற்றுநிரூபத்தின் உப பட்டியல் II இல் குறிப்பிட்டுள்ளதன் படி ஆகும்.*

**2. கல்வித் மற்றும் ஏனைய தகைமைகள் :**

2.1 *கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம் ஆகியவற்றுடன் மேலும் இரு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். இவற்றில் ஒரே தடவையில் 03 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதப் பாடம் உள்ளடங்கலாக ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.*

*மற்றும்*

*கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல். (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்த).*

*விசேட குறிப்பு :*

*02 ஆண்டுகள் வடமேல் மாகாண சபையின் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான மத்திய நிலையம் ஒன்றில் நுட்பவியலாளராக பணியாற்றியுள்ள விண்ணப்பதாரிகள் கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் போதுமானது. (இந்த குறிப்பின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அது தொடர்பில் நிறுவனத் தலைவரூடாக உறுதிப்படுத்த வேண்டும்.)*

2.2 *தொழில் தகைமை : நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் பயிற்சி நிலையம் ஒன்றில் உரிய பயிற்சியைப் பெற்று நெசவுக் கைத்தொழில் இறுதிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.*

2.3 *உடல் தகைமை : வடமேல் மாகாணித்தினுள் சகல பகுதிகளிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் அலுவல்களைச் செய்வதற்கான உடல், உள தகுதியுடனும் இருத்தல் வேண்டும்.*

2.4 *ஏனைய தகைமைகள் :*

(i) *விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல்.*
(ii) *போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு கிட்டிய 03 வருடங்களுக்குக் குறையாத காலத்தில் வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிலையான வதிவைக் கொண்டிருக்க வேண்டும்.*
*(வதியும் கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட, பிரதேச செயலாளரினால் கையொப்பம் இடப்பட்ட வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)*

(iii) நற்பண்புடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

(iv) சகல கல்வி, தொழில் மற்றும் ஏனைய தகைமைகளையும் 2018.08.31 ஆந் திகதிக்கு பூரணப்படுத்தி சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். தற்போது அரச/மாகாண அரச சேவையில் உள்ள ஒருவருக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. அவர்கள் தங்களது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவருடாக அனுப்ப வேண்டும்.

**3. சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. பதவிக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்பட்டது.

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படுவது மூன்று (03) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டதாகும் என்பதுடன், அவர் நன்னடத்தைக் காலத்தினுள் தமது பணியை திருப்திகரமாக ஆற்றியிருப்பின் மற்றும் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மற்றும் பணியில் நிரந்தரமாக்கப்படுவதற்கான ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திருப்பின் நன்னடத்தைக் கால முடிவில் உத்தியோகம் நிரந்தரமாக்கப்படும்.

(iii) அரச நிர்வாக சுற்று நிருபம் 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் சேவையில் இணைந்து 05 வருடங்களுக்குள் சேவையில் இணைந்த மொழி தவிர்ந்த ஏனைய அரச கரும மொழி/மொழிகள் தொடர்பில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) இந்தப் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்கள கட்டளைகள் அரசு மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

**4. ஆட்சேர்ப்பு செய்யும் முறை :**

வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு அல்லது அதிகாரம் அளிக்கப்படும் நிறுவனம் மூலம் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். எழுத்துப் பரீட்சையினதும், செயன்முறைப் பரீட்சையினதும் புள்ளிகளின் வரிசைப் படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அதில் தகுதி பெறும் விண்ணப்பதாரிகள் நெசவுத் தொழில் ஆலோசகர் பதவியின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

**5. பரீட்சை முறை :**

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும் என்பதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

i. ***எழுத்துப் பரீட்சை***

| பாடம் | காலம் | புள்ளி | சித்திக்கான புள்ளி | பாடத் திட்டம் |
|---|---|---|---|---|
| நெசவுக் குறிப்புக்கள் | 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் | 100 | 40 | கைத்தறி துறை நெய்தலின் போது பிரயோகிக்கப்படும் சகல நெய்தல் நுட்பங்கள் மற்றும் வடிவமைப்பு தொடர்பில் பரீட்சித்தல் |
| இயந்திரக் குறிப்புக்கள் | 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் | 100 | 40 | கைத்தறி உபகரணங்களை இனம் காணல், அவற்றின் பயன்பாடு தொடர்பான அறிவைப் பரீட்சித்தல் |

| பாடம் | காலம் | புள்ளி | சித்திக்கான புள்ளி | பாடத் திட்டம் |
|---|---|---|---|---|
| நெசவுக் கணிதம் | 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் | 100 | 40 | கைத்தறி நெசவு உற்பத்தியின் போது பிரயோகிக்கப்படும் கணித முறைகள் தொடர்பிலான அறிவைப் பரீட்சித்தல் |
| பொது அறிவு | 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் | 100 | 40 | கைத்தறி நெசவு ஆடை உற்பத்தியின் வரலாறு, புதிய போக்குகள், சந்தைப் படுத்தல் மற்றும் முகாமைத்துவம் உட்பட கைத்தறி நெசவுக் கைத்தொழில் தொடர்பிலான பொது அறிவு |

மேற்கூறிய ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் வினாப் பத்திரங்கள் நான்கு தயாரிக்கப்படும். எழுத்து மூல பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

ii. ***செயன்முறைப் பரீட்சை***

| பாடம் | காலம் | புள்ளி | சித்திக்கான புள்ளி | பாடத் திட்டம் |
|---|---|---|---|---|
| செயன்முறைப் பரீட்சை | 30 நிமிடங்கள் | 100 | 40 | 01. கைத்தறி துணி நெய்தல், வடி வமைப்பு, கைத்தறி இயந்திரத்தை நெய்த லுக்காக தயார் செய்து கொள்ளுதல், அதற்காக பயன்படுத்தப்படும் உப கரணங்கள் தொடர்பான செயன்முறை அறிவைப் பரீட்சித்துப் பார்த்தல்.<br><br>02. வழங்கப்படும் குறிப்பிடப்பட்ட கால எல்லை ஒன்றினுள் இயந்திர தறியைப் பயன்படுத்தி அலங்காரம் ஒன்றை வடிவமைக்கச் செய்தல். நெய்யப்பட்ட அளவின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். நெய்தலில் விடப்படும் தவறுகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். (பாதிப்புக்கள், ரீட் மார்கஸ், கால் மிதி பலகையை மிதிப்பதில் ஏற்படும் தவறுகள், சடல் கீழே விழுதல்.) |

6. பரீட்சைக் கட்டணமாக ரூ. 500 ஐ வடமேல் மாகாண சபையின் வருமானத் தலைப்பு 2003-02-13 வரவு வைக்கப்படுமாறு தமது நிலையான வதிவைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அந்த நிதியைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட வமே. மா. ச. நி. 2 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைத் தவிர வேறு பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது. எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும். பற்றுச் சீட்டின் நிழற் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் எதிர் காலத்தில் பயன்படலாம்.

**7. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

7.1 இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இசைவாக A4 தாளில் (21 x 29 செ. மீ) இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தின் 01 தொடக்கம் 04 வரை முதலாம் பக்கத்திலும் 05 இலிருந்து ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு தயாரிக்கப்பட வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 31.08.2018 க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு "செயலாளர், வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபைக் காரியாலயத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நெசவுக் கைத்தொழில் ஆலோசகர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018" எனக் குறிப்பிடப்பட வேண்டும். (தற்போது அரச /மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையில் இருப்பவர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

7.2 கையொப்பத்தை உறுதிப்படுத்தல் : விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் அதிகாரி பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூபா 32,960 க்கு மேற்பட்ட மாதாந்த நிரந்தர சம்பளத்தைப் பெறும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

8. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2018.08.31 ஆகும்.

9. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிச் சீட்டு அனுப்பப்படுதல் என்பது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டமை ஆகாது. விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பரீட்சிக்கும் போது தகைமைகள் பூரணப்படுத்தப்படவில்லை என்பது தெரியவருமாக இருந்தால் அவர் நியமனம் பெறுவதற்குள்ள உரிமை இரத்துச் செய்யப்படும். சகல விண்ணப்பதாரிகளினதும் பதவிக்கான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டதாக இருத்தல் கட்டாயமானது.

**10. பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதி செய்தல்**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களிற்காகவும் ஆளடையாளத்தை உறுதி செய்ய பரீட்சை மேற்பார்வையாளரிடம் பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
2. செல்லுபடியான கடவுச் சீட்டு.

குறிப்பு :- பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

11. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரினால் நேர அட்டவணையின் பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சை அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட உடனேயே அது தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் இணையத் தளத்தில் (www.psc.nw.gov.lk) அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். பரீட்சை அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 நாட்களின் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப் பெறவில்லையாயின் உடனடியாக "செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு, வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருணாகல்" என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது பின்வரும் தகவல்களை முன்வைக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| i. | விண்ணப்பதாரியின் முழுப் பெயர் | : | ………………………………………………………………………… |
| ii. | பரீட்சையின் பெயர் | : | ………………………………………………………………………… |
| iii. | முகவரி | : | ………………………………………………………………………… |
| iv. | தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் | : | ………………………………………………………………………… |
| v. | விண்ணப்பப் படிவத்தை தபாலிலிட்ட அலுவலகம், பதிவு இலக்கம் மற்றும் அனுப்பிய திகதி | : | ………………………………………………………………………… |

12. ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவர் என அறியப்பட்டால் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். நியமனத்தின் பின்னரும் தெரிந்து கொண்டே பொய்யான தகவல்களை வழங்கியிருப்பதாக அல்லது உண்மையான தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருப்பது நிரூபிக்கப்பட்டால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.

13. இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல்/தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

14. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் காணப்படுவதாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு (வடமேல்)
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2018, யூலை 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

**வடமேல் மாகாண அரச சேவையின் நெசவுக் கைத்தொழில் ஆலோசகர் (III ஆம் தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம் ☐

தமிழ் ☐

ஆங்கிலம் ☐

(உரிய பெட்டியினுள் ✓ அடையாளத்தை இடுக.)

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழில்) : ..............................................................................

..............................................................................................................

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..............................................................

..............................................................................................................

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ……………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………

1.4 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : …………………………………………………………………

……………………………………………………………………………………………………………………

1.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

2.0 2.1 நிரந்தர முகவரி : …………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………

2.2 தொலைபேசி இலக்கம் : தனிப்பட்ட ……………………………………

3.0 3.1 பால் - (உரிய கட்டத்தினுள் ✓ அடையாளம் இடுக)

ஆண் - ☐

பெண் - ☐

4.0 பிறந்த திகதி : ஆண்டு : ………………… மாதம் : ………………… திகதி : …………………

4.1 விண்ணப்பப் படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியான 2018.08.31 க்கு வயது :

வருடங்கள் : ………………… மாதங்கள் : ………………… நாட்கள் : …………………

5.0 கல்வி மற்றும் தொழில் தகைமைகள் (விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 3.1 இன் கீழ்)

(அ) க. பொ. த. (சா. த). பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு மற்றும் சுட்டெண் …………………

முதலாம் முறை : ஆண்டு : ………………… இரண்டாம் முறை : ஆண்டு : …………………
சுட்டெண் : ………………… சுட்டெண் : …………………

| பாடம் | பெற்றுக் கொண்ட தரம் | | பாடம் | பெற்றுக் கொண்ட தரம் | |
|---|---|---|---|---|---|
| | முதலாம் முறை | இரண்டாம் முறை | | முதலாம் முறை | இரண்டாம் முறை |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

(ஆ) (i) க. பொ. த. (உ. த). பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு : ....................

(ii) பரீட்சை இலக்கம் : ....................

| பாடம் | பெற்றுக்கொண்ட தரம் | பாடம் | பெற்றுக்கொண்ட தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(இ) தொழிற் தகைமைகள் :

(அறிவித்தலின் இலக்கம் 3.2 இன் கீழ் நிறைவு செய்துள்ள பாடநெறிகள் தொடர்பில் குறிப்பிடுக)

இந்த தகவல்கள் தெளிவாகவும் சரியாகவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்றால் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்.

| நிறுவனம் | பூர்த்தி செய்துள்ள பாடநெறிகள் | கால எல்லை | தரம் | சான்றிதழின் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

06. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு இலக்கம் : ............................................................

திகதி : ............................

பற்றுச் சீட்டை வழங்கிய பிரதேச செயலாளர் அலுவலகம் : ............................................................

| |
|---|
| பற்றுச் சீட்டை இந்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டவும். |

07. ...................................................... ஆகிய என்னால் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு உண்மை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்படும் தகவல்கள் பொய்யானவை எனக் கண்டறியப்பட்டால் வடமேல் மாகாண அரச சேவையின் நெசவுக் கைத்தொழில் ஆலோசகர் (III ஆம் தரம்) பதவிக்கு நியமனம் பெறுவதற்கான எனது உரிமை கவனத்தில் கொள்ளப்படாமல் விடப்படுவதற்கும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் முடியும் என்பதையும் நன்கறிவேன்.

திகதி : ............................

......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

விண்ணப்பதாரரின் ஒப்பத்தை உறுதிப்படுத்தல்.
(பொருத்தமற்றதை வெட்டி விடவும்)

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி ................................................................ ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் பரீட்சைக்

கட்டணத்தை செலுத்தி .......................... இலக்கம் கொண்ட பற்றுச் சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும், அவர் .......................... ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதி செய்கின்றேன்.

..................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் : ..................................................................

கையொப்பம் : ..................................................................

பதவி, உத்தியோகபூர்வ முத்திரை : ..................................................................

(இந்த உறுதிப்படுத்தல் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் அதிகாரி தரப் பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 32,960 க்கு மேற்பட்ட மாதாந்த நிரந்தர சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

தற்போது அரச/மாகாண அரச உத்தியோகத்தராக உள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் விதப்புரை. (பொருத்தமற்றதை வெட்டி விடவும்)

இந்த விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி .................................................................. என்பவர் இந்த திணைக்களத்தில் பணியாற்றுபவர் என்பதுடன், இந்தப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்பேன் என்றும், அவரின் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப் பட்டுள்ள இந்த திணைக்களத்தில் உள்ள ஆவணங்களுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டுள்ளது என்பதையும், இந்தப் பரீட்சை தொடர்பாக பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியானவர் என்பதையும் உறுதி செய்கிறேன்.

அறிவித்தலின் 3.1 இன் கீழ் உள்ள விசேட அறிவித்தலின் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் இந்த பகுதியை பூரணப்படுத்தவும்.

இந்த விண்ணப்பதாரி வடமேல் மாகாண நெசவுக் கைத்தொழில் திணைக்களத்துக்குச் சொந்தமான .............................. நெசவுக் கைத்தொழில் மத்திய நிலையத்தில் தொழில் நுட்பவியலாளராக .............................. இலிருந்து .............................. வரை பணியாற்றியுள்ளார்/பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

..............................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரையை பதிக்கவும்)

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்ரீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப் பெறாமை முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகர் என்ற முகவரிக்கு அறிவியுங்கள்**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு***.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்***.

***அட்டவணை - 2018***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 03.08.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.07.2018 |
| | | வெள்ளி | 10.08.2018 | .. | நண்பகல் 12 | வியாழன் | 26.07.2018 |
| | | வெள்ளி | 17.08.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.08.2018 |
| | | வெள்ளி | 24.08.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.08.2018 |
| | | வெள்ளி | 31.08.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.08.2018 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 07.09.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.08.2018 |
| | | வெள்ளி | 14.09.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.08.2018 |
| | | வெள்ளி | 21.09.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.09.2018 |
| | | வெள்ளி | 28.09.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.09.2018 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 05.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.09.2018 |
| | | வெள்ளி | 12.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.09.2018 |
| | | வெள்ளி | 19.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2018 |
| | | வியாழன் | 26.10.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2018 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு ஓகத்து 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.